**S.No. 1261** **16 LCCLT 9/16 CCPUD 9**

(For candidates admitted from 2016–2021 Batch)

B.Lit./Pullavar DEGREE EXAMINATION,
NOVEMBER 2023.

Part III — தமிழ் இலக்கியம்/புலவர் தமிழ் — Major

அற இலக்கியம் (திருக்குறள் நீங்கலாக)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. நாலடியாரில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

2. பழமொழி நானூற்றின் ஆசிரியர் யார்?

3. சிறந்த அறிவாகச் சிறுபஞ்சமூலம் எதனைக் குறிப்பிடுகின்றது?

4. ஏலாதி நூலில் குறிப்பிடப்படும் மருந்து பொருட்கள் யாவை?

5. 'ஆர்கலி உலகத்து மகட்கு எல்லாம்' – எனத் தொடங்கும் நூல் எது?

6. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் யார்?

7. இருலுலகம் சேராத ஆறாகத் திரிகடுகம் கூறும் வழிகள் யாவை?

8. எதனை அடக்குதல் இனிது என இனியவை நாற்பது கூறுகிறது?

9. 'அஃகம் சுருக்கேல்' என்பதன் பொருள் என்ன?

10. 'ஐந்தொழிற்கிறை நீ' — என்னும் பாரதிதாசன் ஆத்திசூடியில் ஐந்தொழிலாவது யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) பொறையுடைமையால் வரும் நன்மையினை நாலடியாரின் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) அருளோடு கூடிய அறம் சிறந்தது என்பதற்குப் பழமொழி பாடல் கூறும் கருத்துகளை எழுதுக.

12. (அ) எவையெவை பெண்டிற்குச் சிறப்பினைத் தருவதாகச் சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது?

(அல்லது)

(ஆ) சிறந்த மன்னனாக வாழும் வழியினை ஏலாதி பாடல் மூலம் வெளிப்படுத்துக.

13. (அ) முதுமொழிக் காஞ்சி குறிப்பிடும் அறிவுப்பத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) எவையெல்லாம் வாடும் என்று நான்மணிக்கடிகை குறிப்பிட்டுள்ளது?



14. (அ) நல்லவர்க்கு உரியனவும் நல்ல தவமுடையாரின் கொள்கைகளையும் திரிகடுகம் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) வேந்தனுக்கு இனியதாக இனியவை நாற்பது கூறும் செய்திகளை எழுதுக.

15. (அ) கல்வி பற்றி ஆத்திசூடி கூறும் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மனிதர்கள் தவிர்க்க வேண்டியவைகளாகப் பாரதிதாசன் ஆத்திசூடியில் கூறுவனவற்றை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.

16. ஈகை குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

17. ஏலாதி கூறும் அறக் கருத்துகளை விவரிக்க.

18. முதுமொழிக்காஞ்சியின் 'துவ்வாப் பத்து' 'அல்ல பத்து' கூறும் செய்திகளை விவரிக்க.

19. இனியவை நாற்பது கூறும் வாழ்வியல் அறங்களைக் கட்டுரைக்க.

20. பாரதிதாசன் ஆத்திசூடியில் வெளிப்படும் மொழிபற்றைத் தொகுத்தெழுதுக.